பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

17 12 2025 WEDNESDAY 7 15 PM

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக ஓமன் சென்றடைந்தார்.

2. அணுமின் உற்பத்தியை அதிகரிக்க வகை செய்யும் மசோதா மக்களவையில் இன்று நிறைவேறியது.

3. பாரம்பரிய மருத்துவமுறை ஆராய்ச்சிக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. சத்திஷ்கடில் 11 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

5. தேசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில், ராஜஸ்தானின் Anantjeet Singh Naruka – Darshana Rathore இணை தங்கப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக ஓமன் சென்றடைந்தார்.

மஸ்கட் விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்தியா - ஓமன் இடையேயான தூதரக உறவுகளின் 70 ஆண்டு நினைவைக் குறிக்கும் வகையில் பிரதமர் இப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

ஓமன் சுல்தான் Haithim Bin Tarik-குடன் பேச்சு நடத்தும் பிரதமர், அந்நாட்டில் வசிக்கும் இந்திய வம்சாவளியினருடனும் கலந்துரையாடுகிறார்.

>>>>><<<<<

இதற்கிடையே, இந்தியா – ஓமன் இடையே ஒருங்கிணைந்த பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளதாக தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று மஸ்கட்டில் இந்தியா - ஓமன் வர்த்தக மாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை மேலும் அதிகரிக்க இந்த ஒப்பந்தம் உதவிடும் என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>><<<<<

பாரம்பரிய மருத்துவமுறை ஆராய்ச்சிக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

உலக சுகாதா அமைப்பின் பாரம்பரிய மருத்துவம் தொடர்பான சர்வதேச உச்சி மாநாட்டை இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பாரம்பரிய மருத்துவத்தில் இந்தியா நீண்டகால அனுபவத்தை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நமது பாரம்பரிய மருத்துவத்தை சர்வதேச அளவில் பிரபலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதாப் ராவ் ஜாதவ் கூறினார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் 99 சதவீத அகல ரயில்பாதை வழித்தடங்கள், மின்மயமாக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், விரைவில் அனைத்து வழித்தடங்களும் மின்மயமாக்கப்படும் என்று கூறினார்.

25 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 14 ரயில்வே மண்டலங்களில் மின்மயமாக்கும் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

அணுமின் உற்பத்தியை அதிகரிக்க வகை செய்யும் மசோதா மக்களவையில் இன்று நிறைவேறியது.

முன்னதாக, இந்த மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், அடுத்த 22 ஆண்டுகளுக்குள் 100 ஜிகாவாட் அணுமின் உற்பத்தி என்ற இலக்கை எட்ட இந்த மசோதா உதவிடும் என்று கூறினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு இந்த மசோதா கூடுதல் வலுசேர்க்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் குறித்த மசோதா மீதான விவாதம் மக்களவையில் தொடங்கியது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்திற்கு மாற்றாக தாக்கல் செய்யப்பட்ட இந்த மசோதாவில், பயனாளிகளுக்கு 125

நாட்கள் பணி வழங்குவதை சட்டபூர்வமாக்குவதற்கான அம்சம் இடம்பெற்றுள்ளது.

>>>>><<<<<

ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் நிலையங்களை விரிவாக்கம் செய்வது மற்றும் நவீனமயமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், 2 ஆயிரத்து 539 கோடி ரூபாய் செலவில் இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

>>>>><<<<<

தில்லி – ஃபெரோஸ்பூர் இடையிலான வந்தேபாரத் ரயில் பர்னாலாவில் நின்று செல்லும் என்று ரயில்வே இணையமைச்சர் திரு. ரவ்னீத் சிங் பிட்டு கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதன் மூலம் மால்வா மண்டலத்திற்கு உட்பட்ட ஆறு மாவட்ட மக்கள் பயனடைவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தில்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் காற்று மாசை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து, மூன்றாவது முறையாக மத்திய அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் தலைமையில் உயர்நிலைக் குழுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும், கட்டிடங்களை இடிப்பதற்கு தடை விதிக்க வேண்டும் என்று அமைச்சர் இக்கூட்டத்தில் அறிவுறுத்தியதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

மருந்து உற்பத்தி முனையமாக ஒடிசா உருவெடுத்து வருவதாக அம்மாநில அமைச்சர் திரு. Sampad Chandra Swain கூறியுள்ளார்.

புவனேஷ்வரில் நடைபெற்று வரும் மருந்து உச்சிமாநாடு குறித்து செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் அவர் இதனை தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் 6 ஆயிரத்து 263 கோடி ரூபாய் மதிப்பிலான 43 திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

சத்திஷ்கடில் 11 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

நாராயன்பூர் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ராபின்சன் குடியா முன்னிலையில் அவர்கள் சரணடைந்தனர்.

சரணடைந்தவர்களில் 5 பேர் பெண்கள் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இவர்களுக்கு 37 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

>>>>><<<<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான உச்சிமாநாடு அடுத்த ஆண்டு புதுதில்லியில் நடைபெறவுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில் நடைபெற்ற, இந்த மாநாடு தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான அனைத்து அம்சங்கள் குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் என்றும் திரு. ஜிதின் பிரசாதா தெரிவித்தார்.

>>>>><<<<<

ஆந்திரா, 15 சதவீத வளர்ச்சியை எட்டும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சியர்கள் பங்கேற்றுள்ள இரண்டு நாள் மாநாட்டினை இன்று அமராவதியில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

சிறந்த நிர்வாகத்தை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் முதலமைச்சர் இக்கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

>>>>><<<<<

தெலங்கானாவில் ஐந்து சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு எதிரான தகுதி நீக்க மனுக்களை, சட்டப்பேரவைத் தலைவர் திரு. பிரசாத் குமார் நிராகரித்துள்ளார்.

இதுதொடர்பாக விரிவாக விசாரணை நடத்திய பின்னர், பேரவைத் தலைவர் இதற்கான உத்தரவினை பிறப்பித்துள்ளதாக சட்டப்பேரவை செயலர் திரு. நரசிம்மச்சாரியுலு செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மஹாரஷ்ட்ராவில் மாநில அரசு சார்பில் பராமரிக்கப்படும் நினைவகங்களில் ஆக்கிரமிப்புகளை தடுப்பதற்கென குழு ஒன்றை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மும்பையில் முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. Ashish Shelar தலைமையில் இந்தக் குழு அமைக்கப்படவுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

ஜம்மு கஷ்மீர் ஒட்டிய எல்லைப்பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

பனிக் காலத்தில் ஊடுருவல்களை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடும் பனிப்பொழிவிற்கிடையே பாதுகாப்புப் படையினர் ரோந்துப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

>>>>><<<<<

ஐக்கிய அரபு எமிரேட் உடனான கூட்டு ராணுவப் பயிற்சியில் பங்கேற்பதற்காக 45 பேர் கொண்ட இந்தியக் குழுவினர் அந்நாட்டிற்கு புறப்பட்டுச் சென்றனர்.

இந்த கூட்டு ராணுவப் பயிற்சி நாளை தொடங்கி, வரும் 30ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

இந்தியா - அர்ஜென்டினா இடையே வேளாண் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான திட்ட அறிக்கை கையெழுத்திடப்பட்டுள்ளது.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமமும், அர்ஜென்டினாவின் தேசிய வேளாண் தொழில்நுட்ப மையமும் இதில் கையெழுத்திட்டுள்ளன.

>>>>><<<<<

தேசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில், ராஜஸ்தானின் *Anantjeet Singh Naruka – Darshana Rathore* இணை தங்கப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

>>>>><<<<<

உலக கோப்பை ரோல் பால் சாம்பியன் போட்டியில் இந்தியா ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா ஆடவர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானையும், மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் போலந்தையும் வென்றது.

>>>>><<<<<

*Wroclaw* செஸ் போட்டியின் ஐந்தாவது சுற்று முடிவில் இந்தியாவின் *Ilamparthi* நான்கரை புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

>>>>><<<<<

பங்களாதேஷ் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Akul Malik*இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் *21-14, 21-16* என்ற செட்கணக்கில் பங்களாதேஷின் *Khandokar Abdus Soad*-ஐ வென்றார்.

*Meiraba Luwang Maisnam, Hemant Gowda, Aditya Tripathi, Atharva Joshi* ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான நான்காவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி தொடங்குவது தாமதமாகியுள்ளது.

லக்னோவில் பனிமூட்டம் நிலவுவதால், போட்டி தொடங்குவது காலதாமதமாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில், இந்தியா *2-1* என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

>>>>><<<<<